## சுருக்கம்

**கலையும் பண்பாடும் – 2018–2019ஆம் நிதியாண்டு – புதுதில்லி, இந்தியா கேட்டில் "பர்யதன் பர்வ்"– தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதற்கான உள்ளபடியான செலவினத் தொகை ரூ.4,82,000/–க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (ப) எண். 17

நாள்: 13–02–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், மாசி 1

**படிக்கப்பட்டது:-**

1. புதுதில்லி தமிழ்நாடு இல்ல முதன்மை ஆணையர் அவர்களின் நேர்முகக் கடித எண் 10/ TNH/PRC/2018, நாள் 07.08.2018
2. கலை பண்பாட்டு ஆணையர் கடித ந.க. எண் 5907/இ1/2018, நாள் 04.12.2018

**ஆணை:–**

புதுதில்லி, இந்தியா கேட்டில் 16.09.2018 முதல் 27.09.2018 வரை நடைபெற்ற "பர்யதன் பர்வ்" என்ற நிகழ்ச்சியில் தமிழக பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளை வெளிப்படுத்திடும் விதமாக தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் மூலம் 22.09.2018 மற்றும் 23.09.2018 ஆகிய இரண்டு நாட்கள் கரகாட்டம், தேவராட்டம், பொய்க்கால் குதிரை, சேவையாட்டம், புலியாட்டம், ஒயிலாட்டம், கொம்பு வாத்தியம், கொக்கலிக்கட்டையாட்டம், நையாண்டி மேளம் ஆகிய தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடத்த கீழே அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் ரூ.4,82,000/– தொகைக்கு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ. எண் | செலவின விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | தேவராட்டம் மற்றும் சேவையாட்டம்<br>(9 கலைஞர்கள்) * (ரூ.13,500/– X 9 கலைஞர்கள்) | 1,21,500/– |
| 2. | கரகாட்டம் மற்றும் ஒயிலாட்டம்<br>(7 கலைஞர்கள்) * (ரூ.13,500/– X 7 கலைஞர்கள்) | 94,500/– |
| 3 | புலியாட்டம், கொம்பு வாத்தியம் மற்றும் கொக்கலிக்கட்டையாட்டம்<br>(8 கலைஞர்கள்) * (ரூ.13,500/– X 8 கலைஞர்கள்) | 1,08,000/– |

| | | |
|---|---|---|
| 4 | பொய்க்கால் குதிரை மற்றும் நையாண்டி மேளம் (8 கலைஞர்கள்) * (ரூ.13,500/– X 8 கலைஞர்கள்) | 1,08,000/– |
| 5 | புதுதில்லியில் போக்குவரத்து செலவினம் (Lumpsum) (புதுதில்லி இரயில் நிலையம் – விடுதி – புதுதில்லி இரயில் நிலையம்) (விடுதி – இந்தியாகேட் – விடுதி (இரண்டு நாட்கள்) | 30,000/– |
| 6. | குழுத்தலைவருக்கான மதிப்பூதியம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்கள் (Lumpsum) | 20,000/– |
| | **மொத்தம்** | **4,82,000/–** |

2 கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துரு ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஏற்று, புதுதில்லி, இந்தியா கேட்டில் 16.09.2018 முதல் 27.09.2018 வரை நடைபெற்ற "பர்யதன் பர்வ்" என்ற நிகழ்ச்சியில் தமிழக அரசின் கலை பண்பாட்டுத் துறை சார்பில் திருச்சிராப்பள்ளி மண்டலக் கலை பண்பாட்டு மையத்தின் மூலம் 22.09.2018 மற்றும் 23.09.2018 ஆகிய இரண்டு நாட்கள் தமிழக கிராமியக் கலை நிகழ்ச்சிகள் வழங்கியதற்கு ஏற்பட்ட உள்ளபடியான செலவினத் தொகையான ரூ.4,82,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:–

"2205 00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள் – JA கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் – 09. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(த.தொ.கு.2205 00 102 JA 0933)

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்க கலை பண்பாட்டு ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண். 6158/நிதி(கல்வி–II)துறை / 2019, நாள் 09.02.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.

உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
இணை இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், திருச்சிராப்பள்ளி

<u>நகல்:-</u>

நிதி(சு,ப(ம)அ.நி)த் துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை – 9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண்–1/பொது) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/02/19
பிரிவு அலுவலர்

13.2.19